த. நா.ச.பே. எண்:14 நாள்:28.08.2021

**ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரும் அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

**மாண்புமிகு முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்க்கையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாக இந்த நாள் மாறப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய ஒரு தீர்மானத்தை நான் இன்றையதினம் இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு ஏதுவாக முன்மொழிகிறேன்.

இந்த மண்ணையும் மக்களையும் காக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் திட்டமிடப்பட்டுள்ள தீர்மானம் இன்றைய நாள் நிறைவேறப் போகிறது. பொதுவாக பல்வேறு மக்கள் சட்டங்களை நிறைவேற்றிக் காட்டிய இந்த மாமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யவேண்டும் என்பதற்கான தீர்மானத்தை நாம் நிறைவேற்றப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய நெருக்கடியான சூழலை ஒன்றிய அரசுதான் உருவாக்கியது.

வேளாண்மையை மேம்படுத்தவும், உழவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் கொண்டு வரப்பட்டதாக ஒன்றிய அரசால் சொல்லப்படும் மூன்று வேளாண் சட்டங்களும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக இல்லை; வேளாண்மையை அழிப்பதாக இருக்கிறது என்றே வேளாண் பெருங்குடி மக்கள் சொல்லி

வருகிறார்கள். அதனை உணர்த்துவதற்காகக் கடந்த ஆண்டு முதல் போராட்டத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் இப்படி ஒரு எழுச்சிமிகுப் போராட்டம் நடந்தது கிடையாது; இவ்வளவு நீண்ட காலம் நீடித்ததும் இல்லை என்று சொல்லத்தக்க அளவிலே உழவர்கள் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. 'மக்களாட்சி காலத்திலே மக்கள் குரலுக்கு அளிக்கும் மரியாதை இதுதானா**?**' என்ற கேள்வி ஒருபக்கம் எழுந்து நிற்கிறது. இத்தகைய சூழலில் ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்களை முழுமையாக எதிர்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நம் நாட்டில் வைத்துள்ளோம். இதன் நோக்கத்தையும் செயல்பாட்டையும் சிதைக்கும் நோக்கத்தோடு, இந்தச் சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு துறைக்கு எந்த மாநில அரசுடனும் ஆலோசனை நடத்தாமல், தன்னிச்சையாக ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்திருப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமானது. அதனால்தான் அந்தச் சட்டங்களை நிராகரிக்க வேண்டியதாக இருக்கிறது. இதனால் மாநில அரசின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன; பறிக்கப்படுகின்றன; கூட்டாட்சித் தத்துவம் கேள்விக்குள்ளாகிறது. ஜனநாயக அமைப்புகளின் மாண்பு சிதைகிறது. இதனால்தான் இந்த மூன்று சட்டங்களையும் நிராகரிக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கடந்த 2020ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில் பின்வரும் மூன்று வேளாண் சட்டங்களை இயற்றியிருக்கிறது:

(i) விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபம் (ஊக்குவிப்பு மற்றும் உதவுதல்) சட்டம், 2020.

(ii) விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணை சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020.

(iii) அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம், 2020.

இந்த மூன்று சட்டங்களுமே வேளாண்மைக்கும், உழவர்களுக்கும் எதிரானவைதான்.

உழவர்கள் இந்த நாட்டிலிருந்து எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான்; நெற்றி வியர்வை சிந்தி, தாம் விளைவிக்கும் பொருளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதுதான் அவர்களது ஒரே கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், குறைந்தபட்ச ஆதார விலை என்பதைக் குறைந்தபட்சம் வாய் வார்த்தைக்குக் கூட பேசாத சட்டங்கள்தான் இந்த மூன்று சட்டங்களும்.

ஒன்றிய அரசின் வேளாண் விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபச் சட்டமானது, பல ஆண்டுகளாக உழவர்களின் விளைபொருட்களை விற்பனை செய்து கொடுப்பதில் பெரும் பங்காற்றி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சந்தைப் பகுதியை உள்நோக்கத்துடன் குறைக்கிறது. அதாவது, மாநில அரசின் அதிகாரத்துக்குட்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் சொல்லும் வர்த்தகப் பகுதி

என்பது தெளிவான வரையறைக்கு உட்பட்டதாக இல்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இது பெருமளவிலே வருவாய் இழப்பை ஏற்படுத்தும்; இதனால், உழவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முடியாத சூழலும் ஏற்படும். ஒன்றிய அரசின் இந்தச் சட்டத்தினால் மாநில விவசாயிகளுக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்பது உறுதியாகிறது.

இரண்டாவதாக, ‘‘விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020’’ என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமானது, தனியார் கூட்டாண்மை நிறுவனங்களை மாநில அரசின் கண்காணிப்பிலிருந்து விடுவிப்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது நன்கு உறுதியாகின்றது.இந்தச் சட்டத்தினால், இலாபகரமான விலையை உழவர்கள் கேட்டுப்பெற முடியாத நிலை உருவாகும். அதுமட்டுமல்ல; தங்களின் நில உடைமை உரிமைகள் பறிபோகும் என்றும் உழவர்கள் அஞ்சுகின்றார்கள். இச்சட்டத்தின்படி, ஒப்பந்த நிபந்தனைகள், உழவர்களைவிட, விளைபொருளை வாங்கும் தனியாருக்கே சாதகமாக இருக்கும். அதுமட்டுமல்ல; இடுபொருட்களின் விலையும், விளைபொருளுக்கான விற்பனை விலைக்கு இணக்கமாக இருக்காது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைத் தடுக்கவும் இச்சட்டத்தின்கீழ் வழியில்லை. இச்சட்டம் விளைபொருளை கொள்முதல் செய்யும் தனியார் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளது என்பது நடுநிலையாளர்கள் கருத்து.

மூன்றாவதாக, ‘‘அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம், 2020’’ என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது; இதன்படி, விளைபொருள்களின் சேமிப்புக்

கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஆதார விலை நிறுத்தப்படும்; விளைபொருட்களுக்கு உரிய விலை உழவர்களுக்குக் கிடைக்காது, ஆனால் சந்தையில் செயற்கையான விலையேற்றம் ஏற்படும்; இந்தத் திருத்தச் சட்டம்மூலம் விவசாயிகள் எவ்விதப் பயனும் அடையப்போவதில்லை.

இப்படி இந்த மூன்று சட்டங்களுமே வேளாண்மைக்கு எதிரானதாகவும், உழவர்கள் மற்றும் நுகர்வோருக்குப் பாதகமானதாகவும் அமைந்திருக்கின்றன. எனவே, இந்த அரசு கண்ணில் வைத்துப் போற்றும் நம் உழவர்களின் நலன்களை என்றென்றும் பாதுகாத்திடவும், அவர்தம் வாழ்வு செழிக்கவும், வேளாண்மை என்பது பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குச் சென்றுவிடாமல் தடுக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக அமைந்துள்ள ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களும் இரத்து செய்யப்பட வேண்டும் எனக் கோரி ஒன்றிய அரசை வலியுறுத்தி, ஒருமனதாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2020ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 9ஆம் தேதி தொடங்கி, இன்றுவரை 385-வது நாளாக உழவர்கள் இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் எதிர்த்து, தொடர்ந்து கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அறவழிப் போராட்டத்திற்கு மதிப்பளிக்கும் இந்த அரசு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறது:

**<u>தீர்மானம்</u>**

"வேளாண் தொழில் பெருகவும், விவசாயிகள் வாழ்வு செழிக்கவும் இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, இம்மாநிலத்தின் வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையைச்

சமர்ப்பித்து, வேளாண்மைத் துறையின் பெயரினை, ‘வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை’ என மாற்றி ஒரு உயர்ந்த குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த ஆண்டு ஒன்றிய அரசு விவசாயிகள் நலனுக்கு எதிராகக் கொண்டு வந்த சட்டங்கள் முறையே;

(i) விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபம் (ஊக்குவிப்பு மற்றும் உதவுதல்) சட்டம், 2020;

(ii) விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020;

(iii) அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம், 2020

ஆகிய மூன்று சட்டங்களும் நமது நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் உகந்ததாக இல்லை என்பதால், அவை ஒன்றிய அரசினால் இரத்து செய்யப்படவேண்டும் என இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது”.

மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை மீண்டும் கேட்கிறேன்; இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9